பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**30 06 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா 26 நாடுகளுடன் குடியுரிமை தொடர்பான 28 ஒப்பந்தங்களை செய்து கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

2. வளமான பொருளாதாரம், வலிமையான பாதுகாப்பை உறுதி செய்வதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் அறிவுசார் கட்டமைப்பு பழங்குடியின சமுதாயத்தோடு வேரூன்றியிருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

4. கிராமசபையை ஆற்றல் மிக்க அமைப்பாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தை பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

5. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் இன்றிரவு நடைபெறவுள்ள ஆட்டத்தில் நார்வே — ஐவரிகோஸ்டை எதிர்கொள்கிறது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

இந்தியா 26 நாடுகளுடன் குடியுரிமை தொடர்பான 28 ஒப்பந்தங்களை செய்து கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சட்டவிரோத குடிபெயர்தலை இருதரப்பிலும் தடுத்தல், முறைகேடாக செயல்படும் தரகர்களின் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தல், சட்டவிரோதமான நுழைவு ஆகியவற்றை முழுமையாக தடுப்பதற்கு இருதரப்பிலும் பொறுப்பேற்கும் வகையில் இந்த ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

சட்டவிரோத ஊடுருவலை தடுக்கும் வகையில், நவீன கணினிவழி கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு பிற நாடுகளுக்கு பணி செய்யவோ அல்லது வேறு நியாயமான காரணங்களுக்காகவோ செல்வோருக்கு அனுமதி வழங்க E-Migrate இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், 50 லட்சத்திற்கும் மேற்பட்ட குடியுரிமை தொடர்பான மனுக்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சட்டப்பூர்வமான இடம்பெயர்தலை உறுதி செய்வதற்கு இருதரப்பு ஒத்துழைப்பு அவசியமாகிறது என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

வளமான பொருளாதாரம், வலிமையான பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அடித்தளமாக விளங்குகிறது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

வதோதராவில் இன்று ஆற்றல்மிக்க குஜராத் மண்டல மாநாட்டில் உரையாற்றிய அவர், குஜராத் மாநிலத்தில் ரசாயனப் பொருட்கள், மின்னணு மற்றும் கப்பல் கட்டுதல் துறை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை ஆகியவை பாதுகாப்பு உற்பத்தித் துறையின் மையமாக மாநிலத்தை உயர்த்துவதற்கு வழிவகுத்துள்ளதாக தெரிவித்தார்.

பாதுகாப்பு உற்பத்தியில் விரைந்து தன்னிறைவை எட்டுவதற்கான முயற்சிகளை இந்தியா எடுத்து வருவதாக தெரிவித்த அவர், கடந்த **2014-**ஆம் ஆண்டில் **46** ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த உள்நாட்டு பாதுகாப்பு உற்பத்தி, தற்போது ஒரு லட்சத்து **78** ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

முதல் முறையாக தனியார் துறையுடன் இணைந்து, ராணுவ விமான உற்பத்தி தொழிற்சாலை தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்,

**C-295** ரக ஏர்பஸ் விமானங்களை தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறினார்.

விமான உற்பத்தித் துறையில் இது ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்குவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாடு முழுவதும் நெடுஞ்சாலைகளை சீரமைக்க **50** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சாலை பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், சாலைகளில் விபத்துகள் ஏற்படும் இடங்களை கண்டறிந்து, அவற்றை சீரமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார்.

உலகத்தரத்தில் நெடுஞ்சாலைகளை மேம்படுத்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சாலை பாதுகாப்பில் பொதுமக்களின் பங்களிப்பு முக்கியமானது என்று அவர் கூறினார்.

வாகன ஓட்டுநர்கள் சாலை விதிகளை பின்பற்ற வேண்டும் என்று கூறிய திரு நிதின்கட்கரி, வாகனம் ஓட்டும்போது கைபேசியை பயன்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

நாட்டின் அறிவுசார் கட்டமைப்பு பழங்குடியின சமுதாயத்தோடு வேரூன்றி உள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில் உள்ள மத்திய பழங்குடியின பல்கலைக்கழகத்தில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவுடன் கலந்துகொண்ட பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் பேசிய அவர், இயற்கையோடு இணைந்த விலை மதிக்க முடியாத அறிவு, வனம், வேளாண்மை, கால்நடை பராமரிப்பு ஆகியவற்றில் தொன்மை சிறப்புமிக்க அறிவாற்றல், நாட்டின் அடையாளமாக திகழ்வதாக குறிப்பிட்டார்.

நமது பாரம்பரிய அறிவு தொன்றுதொட்டுவரும் நமது தேவைகளை பூர்த்தி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வல்லமை படைத்தவர்களாக கல்வி கற்ற இளைஞர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான புதுமை கண்டுபிடிப்புகளை பழங்குடியினர் பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டும் என்றும் திரு தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

ஜனநாயக கட்டமைப்பில் கிராமசபையை ஆற்றல் மிக்க அமைப்பாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தை பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

நித்தி ஆயோக் உறுப்பினர் டாக்டர் ஆர் பாலசுப்பிரமணியம் புதுதில்லியில் இன்று வெளியிட்ட பஞ்சாயத்துராஜ் அமைப்புகள் தொடர்பான ஆய்வறிக்கையில், நாட்டின் பெரும்பாலான மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் ஜனநாயக நடைமுறைகளில் கிராமசபைகளின் பங்களிப்பு மிகவும் குறைவாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமப்புற இந்தியாவில் சமுதாயம் சார்ந்த வளர்ச்சி, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பொறுப்புகள் ஆகியவற்றை

மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பேசிய பஞ்சாயத்துராஜ் அமைச்சகத்தின் செயலர் திரு விவேக் பரத்வாஜ், கடந்த பத்தாண்டுகளில் கிராமப்புறங்களுக்கான சாலை வசதி, குடிநீர் மற்றும் மின்சார விநியோகம் ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நித்தி ஆயோக் உறுப்பினர் டாக்டர் பாலசுப்பிரமணியம் அளித்த அறிக்கை பற்றி குறிப்பிட்ட அவர், கிராம சபைகளுக்கான அதிகாரம் மற்றும் செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கூறினார்.

வலிமையான, சமூக பொருளாதார அமைப்பாக இதனை மாற்றுவதற்கும், அரசு நிர்வாகத்தில் பங்கேற்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் நம்பிக்கை மிகுந்த அமைப்பாக கிராமசபைகளை வலுப்படுத்த வேண்டும் என்றும் திரு விவேக் பரத்வாஜ் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

மத்திய அரசின் நலத்திட்டங்களை அனைத்து மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் தலைமை பொறுப்பில் உள்ள பெண்கள் முக்கிய

பங்காற்ற வேண்டும் என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கேட்டுக்கொண்டுள்ளார்.

மூன்றுநாள் பயணமாக திரிபுரா மாநிலத்திற்கு சென்றுள்ள அவர், அகர்தலா மாநகராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவினரிடையே உரையாற்றியபோது, வடகிழக்கு மாநிலங்களை மேம்படுத்த பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக கூறினார்.

கடந்த 12 ஆண்டுகளில் 50-க்கும் மேற்பட்ட முறை வடகிழக்கு மாநிலங்களுக்கு சென்று நேரடியாக ஆய்வு செய்து, அப்பகுதியை மேம்படுத்துவதற்கான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் செயல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் தொலைநோக்கு திட்டத்தை செயல்படுத்தும் முன்மாதிரி மாநிலமாக திரிபுரா திகழ்வதாகவும் திருமதி அன்னபூர்ணா தேவி குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

கர்நாடகா, ஜார்கண்ட், மகாராஷ்ட்ரா மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் இன்று தொடங்கியது.

கர்நாடகாவில் உள்ள 31 மாவட்ட தேர்தல் அலுவலகத்திலிருந்து 59 ஆயிரம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அரசியல் கட்சிகளை சேர்ந்த ஒரு லட்சத்து 15 ஆயிரம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் அலுவலர்களுடன் இணைந்து செயல்படுவர்.

முதல் முறை வாக்காளர்கள் கட்டாயமாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க வேண்டும் என்று கர்நாடகா முதலமைச்சர் திரு டி கே சிவகுமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜார்கண்ட் மாநிலத்திலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் இன்று தொடங்கியது.

ஜூலை 29-ஆம் தேதிவரை இந்த பணிகள் நடைபெறும் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு கே.ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

வரைவு வாக்காளர் பட்டியல் ஆகஸ்ட் 5-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மகாராஷ்ட்ராவில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதொடர்பான படிவங்களை வாக்காளர்களுக்கு அவர்கள் விநியோகித்து வருகின்றனர்.

வரைவு வாக்காளர் பட்டியல் ஆகஸ்ட் ஐந்தாம் தேதி வெளியிடப்பட உள்ளது.

<<<<<>>>>>>

கர்நாடக மாநிலம் மங்களூரையொட்டிய கடல் பகுதியில் படகில் சிக்கித்தவித்த ஆறு இந்திய மீனவர்களை பாதுகாப்பாக மீட்ட கடலோர காவல்படைக்கு பாதுகாப்பு அமைச்சகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் இன்று நார்வே — ஐவரிகோஸ்டை எதிர்கொள்கிறது.

டெக்சாஸில் இப்போட்டி இரவு பத்தரை மணிக்கு நடைபெறுகிறது.

முன்னதாக நடைபெற்ற ஆட்டங்களில் மொராக்கோ, பராகுவே, பிரேசில் ஆகிய அணிகள் 16-ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

மொராக்கோ — நெதர்லாந்தையும், பராகுவே — ஜெர்மனியையும், பிரேசில் — ஜப்பானையும் தோற்கடித்தன.

<<<<<END>>>>>>